[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

எல்லாவற்றையும்விட, கடிதங்கள் எழுதினோம்—தீர்மானம் நிறைவேற்றினோம்—அமைச்சரிடம் பேசினோம்—இருந்த அமைச்சர்களை அனுப்பிப் பேச வைத்தோம்—ஏன், நானே போய்ப் பேசினேன்—அனைத்துக் கட்சித் தலைவர்களும் வந்து பேசினார்கள் என்பதையெல்லாம்விட எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிற நிகழ்ச்சி, இன்றைக்கு எல்லோரும் தமிழர்களாக இருந்து, இந்தச் சட்டசபையிலே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதுதான் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி என்று கூறி, அமைகின்றேன்.

பிற்பகல் *12-05*

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் அவர்களுக்கான, சீரமைப்பதற்கான, அவர்களின் வாழ்வைப் புனரமைப்பதற்கான ஓர் இடைக்கால நிவாரணம் என்ற அடிப்படையிலேதான் இங்கே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துகளைச் சொன்னோம். அங்கே இலங்கையில் வாழக்கூடிய தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு என்று சொன்னால், அது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிலைப்பாடும் என்று சொல்லப்படுவது தனி ஈழம்தான் தனித் தீர்வு. அதற்கு இடையில் இடைக்கால நிவாரணமாக அந்த மக்கள் வாழ்வதற்காக என்று சொல்லியிருக்கிறோம் என்பதையும் தங்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாநில சுயாட்சி என்று மிக அழுத்தந்திருத்தமாகச் சொன்னது பதிவேட்டிலே பதிவாகி இருக்கிறது. பரவாயில்லை. இப்போது மாற்றிக்கொள்வதனால் தவறு இல்லை.

(ஆ) நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அ.இ.அ.தி.மு.க. சார்பாக திருமதி செல்வி ராமஜெயம், திரு. ஆர். சின்னசாமி, திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன்

2009 ஜூலை 1] [பேரவைத் தலைவர்]

ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. எஸ். இராசசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. கே. உலகநாதன், திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி ஆகியோரும், ம.தி.மு.க. சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ் ஆகியோரும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக திரு. து. ரவிக்குமார் ஆகியோரும் விதி 55 மற்றும் 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக, அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர், யார் பேசுகிறார்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, சுருக்கமாகச் சொல்ல வேண்டும். நேரம் இல்லை.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பழுப்பு நிலக்கரித் தொழிற்சாலையில் 1998 ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் போடப்பட்டது. தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துப் போராடினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute. திரு. சின்னசாமி, நேரம் போதாமை காரணமாக இதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால், இன்றைய Demand-க்கு நேரம் இல்லை. தற்போது மணி 12 ஆகிவிட்டது. மற்ற உறுப்பினர்களும் பேச வேண்டும். (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக்கொள்வோம்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.